**செ. கு. எண்: 118** **நாள்: 23.05.2013**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 23.5.2013

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.தமிழரசன் அவர்கள், 11.5.2013 அன்று மாரடைப்பு ஏற்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 13.5.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி காவல் நிலையத்தில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. சக்திவேல் அவர்கள் 10.5.2013 அன்று மாரடைப்பு ஏற்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 13.5.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

தூத்துக்குடி மாவட்டம், புதூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. அருணாச்சலம் அவர்கள் 14.5.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகரக் காவல், அண்ணா சதுக்கம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. M.ஊர்காவல்பெருமாள் அவர்கள் 17.5.2013 அன்று மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் காலமானார் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.குப்புசாமி அவர்கள் உடல்நலக் குறைவால் 18.5.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், சாணார்பட்டி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. பாண்டியராஜன் அவர்கள் 19.5.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், வடசேரி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. S.கணேசன் அவர்கள் 19.5.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாநகர போக்குவரத்து புலனாய்வுப் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. V.முத்துவேல் கிருஷ்ணன் அவர்கள் மாரடைப்பால் 20.5.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர் ஊர்காவல்பெருமாள்; சிறப்பு உதவி ஆய்வாளர்கள் தமிழரசன், குப்புசாமி, முத்துவேல் கிருஷ்ணன்; தலைமைக் காவலர்கள் அருணாச்சலம், பாண்டியராஜன், கணேசன்; மற்றும் காவலர் சக்திவேல் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாரடைப்பால் காலமான காவல் துறை உதவி ஆய்வாளர் ஊர்காவல்பெருமாள்; சிறப்பு உதவி ஆய்வாளர்கள் தமிழரசன், முத்துவேல் கிருஷ்ணன்; தலைமைக் காவலர் அருணாச்சலம் மற்றும் காவலர் சக்திவேல்; உடல்நலக் குறைவால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் குப்புசாமி, தலைமைக் காவலர்கள் பாண்டியராஜன் மற்றும் கணேசன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**